**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம், வேலூர்.**
**முன்னிலை:- வெ.ரவிச்சந்திரன், பி.எஸ்.சி, பி.எல்.,**
**தலைமை ஏற்பு அதிகாரி.**

**2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாள் வெள்ளிக்கிழமை**

**கணக்கீட்டு மனு எண்.21/2023**
**(சி.என்.ஆர்.எண்.TNVL02-000041-2023)**

S.துளசி, வயது 48,
க/பெ.வில்வநாதன்,
எண்.20/33, அன்னை மேரி தெரு,
சாணாங்குப்பம்-635 814. . . . மனுதாரர்

எதிராக

டி.அப்துல் வாஹித் கம்பெனி,
புட்வேர் டிவிஷன்,
எண்.66/1, எம்.சி.ரோடு,
சின்னகொம்மேஸ்வரம்,
கங்காபுரம் அஞ்சல், வழி: ஆம்பூர்-635 802. . . . எதிர்மனுதாரர்

இம்மனுவானது கடந்த 14.07.2023 அன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்ததில், மனுதாரர் தரப்பில் தொழிற்சங்க செயலாளர் திரு.ஆர்.சுந்தரமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தோன்றா தரப்பினராக ஆக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் என் ஆய்வில் இருந்த இம்மனுவில் இன்று வழங்கும்:-

**உ த் த ர வு**

இம்மனுவானது மனுதாரருக்கு எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியாற்றிய வகையில் சேர வேண்டிய 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019

செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/- கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது, தொகை வழங்கும் வரையிலும் 10% வருட வட்டியும் கோரப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தாக்கல் செய்த மனு உரை சுருக்கம்</u>:-

மனுதாரர் S.துளசி, டோக்கன் எண்.32008 எதிர்மனுதாரர் நிறுவனத்தின் புட்வேர் டிவிசனில் பணியாற்றிய வகையில் 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019 செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/- வழங்குவதாக கூறி நிர்வாக ஆவணத்துடன் பணியை விட்டு வெளியேற்றியதாகவும், அதற்குண்டான அத்தாட்சி கடிதமும் நிர்வாகம் வழங்கியதாகவும், அந்த அத்தாட்சி கடிதத்தில் செப்டம்பர்-2019 சம்பளம் குறிப்பிடவில்லை என்றும், 30.09.2019ல் வழங்குவதாக கூறியதால் இந்த கடிதத்தில் குறிப்பிடவில்லை என்றும், இன்றைய தேதி வரையில் (01.04.2023) வழங்கவில்லை என்றும், மேலும் 20.03.2020 பணிக்கொடையும் ரூ.2,05,357/- வழங்குவதாக கடிதமும், தேதி இல்லாத காசோலையும் அளித்ததாகவும், இதையும் இன்றைய தேதி வரையிலும் வழங்கவில்லை என்றும், பணிக்கொடை கோரி பணிக்கொடை அலுவலரிடம் முறையிட்டுள்ளதாகவும், இதுவும் அல்லாமல் நீக்கப்பட்டவர் என்ற அடிப்படையில் நீக்கப்பட்ட தொகை ரூ.1,78,350/-, நோட்டீஸ் சம்பளம் ரூ.12,300/-, ஆக ரூ.1,90,650/- கோரி முதன்மை தொழிலாளர் நீதிமன்றம், வேலூரில் தனியாக மனு செய்யப்பட்டுள்ளதாகவும் கோரியுள்ளார்.

முடிவாக இந்த மனுவின் மூலம் மனுதாரர் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணியாற்றிய வகையில் 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019

செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/- கோரியும், தொகை வழங்கும் வரையிலும் 10% வருட வட்டியும் கோரி 1947ம் வருடத்திய தொழிற் தகராறு சட்டம் பிரிவு 33 சி(2) படி கணக்கிட்டு உகந்த உத்தரவுகள் வழங்க கோரி தாக்கல் செய்துள்ளார்.

3. இந்த மனுவில் தீர்வு காண வேண்டிய சங்கதி யாதெனில், மனுதாரர் கோரியுள்ளவாறு மனுதாரருக்கு சேர வேண்டிய 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019 செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/- வழங்கிட எதிர்மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமா என்பதேயாகும்.

* மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கபட்டு அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரை குறியிடப்பட்டுள்ளது.

<u>**தீர்வு**</u> :-

மனுதாரர் தனது சாட்சியத்தில் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் புட்வேர் டிவிசனில் பணியாற்றி வந்ததாகவும், எதிர்மனுதாரர் நிறுவனத்தில் தொடர்ந்து வேலை கொடுக்க முடியாத நிலையில் இருந்ததால் 30.09.2019 தேதியில் எதிர்மனுதாரருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் மூலம் தனக்கு செட்டில்மெண்ட் செய்ததாகவும், அந்த செட்டில்மெண்ட் ம.சா.ஆ.1 என்றும், அதில் குறிப்பிட்டுள்ள தொகைகளை குறிப்பிட்ட தேதியில் தனக்கு வழங்குவதாக ஒப்பந்தம் செய்ததாகவும், அதன்படி ம.சா.ஆ.2ல் குறிப்பிட்டபடி ம.சா.ஆ.3 காசோலை வழங்கியதாகவும், மற்ற வர வேண்டிய தொகை குறித்து ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 கடிதம்

கொடுத்ததாகவும், அதன்படி தான் வேலையை விட்டு நின்று விட்டதாகவும், அன்றைய தேதி வரையில் வழங்க வேண்டிய தொகை 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019 செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/-ஐ தொகை வழங்கும் வரையிலும் 10% வருட வட்டியுடன் செலுத்த எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு உத்தரவு பிறப்பிக்குமாறு வாதுரைக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதரவாக ஆவணம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரை குறியிடப்பட்டுள்ளது. மனுதாரரது கோரிக்கைக்கு மாறாக எதிர்மனுதாரர் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் வழக்கில் முன்னிலையாகி இந்த மனுவை நடத்தாத நிலையில், மனுதாரர் சாட்சியம் மூலமாக எதிர்மனுதாரர் நிறுவனத்திலிருந்து மனுதாரருக்கு சேர வேண்டிய 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019 செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம் ரூ.87,068/- நிலுவையிலுள்ளது என்று நிரூபிக்கப்பட்டுள்ளதாக கருதி மனுதாரர் கோரியுள்ளவாறு பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது. 10% வட்டியை பொறுத்து இருதரப்புக்குமிடையே எந்தவித ஒப்பந்தமும் இல்லாததால் இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**இறுதியாக, இந்த மனுவை பகுதியாக அனுமதித்து மனுதாரர் கோரியுள்ளவாறு எதிர்மனுதாரர் மனுதாரருக்கு சேர வேண்டிய 2019 ஆகஸ்டு மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2019 செப்டம்பர் மாதச் சம்பளம் ரூ.12,300/-, 2018-போனஸ் ரூ.28,337/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.6,878/-, 2019-போனஸ் ரூ.22,124/-, என்கேஷ்மெண்ட் லீவு ரூ.5,129/-, ஆக மொத்தம்**

**ரூ.87,068/-ஐ மூன்று மாத காலத்திற்குள் செலுத்த வேண்டுமென்றும், செலுத்த தவறினால் மேற்படி தொகைக்கு ஆண்டொன்றுக்கு 6 சதவீத வட்டி சேர்த்து செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை பற்றிய உத்தரவு இல்லை.**

இந்த உத்திரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, 2023ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

V RAVICHANDRAN
Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி</u>:-**

ம.சா.1 - திருமதி.S.துளசி

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்</u>:-**

| | | | | |
|---|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | - | 30.09.2019 | - | மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய தொகை கணக்கீடு அட்டவணை நகல். |
| ம.சா.ஆ.2 | - | 07.09.2020 | - | எதிர்மனுதாரர் வழங்கிய காசோலையை சொத்தை விற்ற பிறகு வங்கியில் செலுத்தும்படி அறிவிக்கப்பட்ட கடித நகல். |
| ம.சா.ஆ.3 | - | - | - | மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, சோலூர், வழி-சாணாங்குப்பம்-635 814 காசோலை எண்.928631 நகல். |
| ம.சா.ஆ.4 | - | 30.09.2019 | - | மனுதாரருக்கு எதிர்மனுதாரர் வழங்கிய பணி விடுவித்தல் கடித நகல். |

ம.சா.ஆ.5 - 10.08.2020 - எதிர்மனுதாரர் மனுதாரரின் சகதொழிலாளிக்கு 1400 தொழிலாளர்கள் கூண்டோடு ராஜினாமா என்ற தகவல் தந்த கடித நகல்

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:-**

- இல்லை -

V RAVICHANDRAN Digitally signed by V RAVICHANDRAN

**தலைமை ஏற்பு அதிகாரி,**
**கூடுதல் தொழிலாளர் நீதிமன்றம்,**
**வேலூர்.**